**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12–ஆம் நாள் புதன் கிழமை

**இ.ம எண்.3/2022**

**உள்**

**அசல் வழக்கு எண்.304/2020**

கவிதா ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

இ. தினேஷ் ஸ்ரீராம் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 26.09.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எம்.மரியஇன்பராஜ் அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. S. குமரன் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

கூடுதல் எதிர்வழக்குரையை பெற வேண்டி கட்டளை 8 விதி 9 சி.பி.சி.–யின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு.

**2. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சாராம்சம் :**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. பிரதிவாதியின் தரப்பில் அசல் வழக்கில் ஏற்கனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் காலத்தில் பிரதிவாதியின் தரப்பில் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு மற்றும் அதன் தொடர்புடைய ஆவணங்கள் அப்போது கிடைக்கப் பெறவில்லை. மேலும், மனுதாரர் தனக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவின் காரணமாக சிகிச்சையிலிருந்தார்.

தற்போது இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப் பெற்றது. ஆகவே பிரதிவாதியின் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் :</u>**

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிர்மனுதாரர்/வாதியின் தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்புக்கு பிரதிவாதியின் தரப்பில் பதிலறிவிப்பு அனுப்பப்பட்டது. அசல் வழக்கில் பிரதிவாதியின் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி வா.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ளது. அசல் வழக்கின் விசாரணையை காலதாமதம் செய்யும் நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. **<u>பிரச்சனை –</u>**

இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனுவை அனுமதிக்க போதுமான காரணங்கள் உள்ளதா? என்பதேயாகும்.

5. **<u>தீர்வு–</u>**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரர்/வாதி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரதிவாதியின் மீது, ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/பிரதிவாதி தன் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டி, இந்த மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் குறிப்பிடுவது யாதெனில், தன் தரப்பில் உள்ள ஆவணங்களை பற்றி ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் தெரிவிக்காமல் விடுபட்டுள்ளதாகவும், தற்போது அந்த ஆவணங்களை பற்றியும், பிரதிவாதியின் தரப்பில் வாதிக்கு அனுப்பப்பட்ட பதிலறிவிப்பு பற்றியும், எதிர்வழக்குரையில் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும்,

ஆகவே இந்த மனு தாக்கல் செய்திருப்பதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபணையில் அசல் வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்தும் நோக்கத்திற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

6. இந்த மனுவுடன் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது. அதில் ரூ.5,00,000/-ஐ வாதியிடம் கடன் பெற்றதாகவும், அந்த கடனுக்காக வாதி குறிப்பிடும் ஒப்பந்தத்தை எழுதி கொடுத்ததாகவும், வாதி அனுப்பிய நோட்டீஸ்க்கு பிரதிவாதியின் தரப்பில் பதிலறிவிப்பு கொடுக்கப்பட்டதாகவும், கிரைய ஒப்பந்தத்தின் சரத்துகள் வாதியால் மீறப்பட்டிருப்பதாகவும், ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி ரூ.5,00,000/-ஐ செலுத்தும் அளவிற்கு வாதிக்கு வசதியில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விபரம் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்படவில்லை. வாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள, வா.சா.ஆ.5-ன்படி பிரதிவாதியின் தரப்பில் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட விவரத்தை தான் தற்போது கூடுதல் எதிர்வழக்குரையிலும் தெரிவித்துள்ளார். இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையை பெற்றால் வழக்கின் தன்மை எந்த விதத்திலும் பாதிக்காது. ஆகவே இந்த மனுவை அனுமதிக்கலாம் என இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2022-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 12-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2022.10.12 13:50:22 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
இ.ம.எண்.3/2022
உள்
அசல் வழக்கு
எண்.304/2020
உத்தரவு – தெளிவு
நாள் – 12.10.2022

.